மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு நிறுவனத்திற்குத் தேவை என்று கணிப்பதை நியாயம் என்று அரசு ஏற்றுக் கொண்டால் அதை அக்வைர் செய்து கொடுக்க அரசுக்கு ஆட்சேபனை இல்லை. அரசாங்கமே அதை அக்வைர் செய்து கொடுக்கும்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

Clause 1, the preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Land Reforms (Fixations of Ceiling on Land) Third Amendment Bill, 1972 (L.A. Bill No. 19 of 1972) as amended by the Joint Select Committee be passed.'

The motion was put and carried and the Bill as amended by the Joint Select Committee was passed into law.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவு.

(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1972)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/72) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.